**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| **அ.வ.எண்** | 124/2018 | **பி.வா.சா** | 1 |
| **பெயர்** | லட்சுமி | **வயது** | |
| **த/பெ** | | **ஊர்** | |
| **தொழில்** | | **வட்டம்** | |
| **சாதி** | | **மாவட்டம்** | |

The Oaths Act 1969, Act No.44/1969 ன் விதிமுறைகளின் படி 19.03.2024 நாளாகிய இன்று Tr.Senthil kumar Rajavel,L.L.M., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதி ஆவேன். என்னை சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். நிரூபண வாக்குமூலத்தினை கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் எத்தனை பாகம் கோருகிறேன் என்றால் தெரியாது, உள்ளதை கூறுகிறேன். நீதிமன்ற கட்டணம் இது நாள் வரை செலுத்தவில்லை என்றால் சரிதான். நானும் தாவா சொத்தில் கூட்டு சுவாதினதில் உள்ளேன். தாவா சர்வே எண்.143 ஆகும் பரப்பளவு தெரியாது. நான் படிக்கவில்லை. தாவா சொத்தின் செக்குப்பந்தி விவரம் தெரியாது. எனக்கு திருமணமாகி 43 வருடங்கள் ஆகிறது. திருப்பத்தூரில் என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள். நான் எப்பொழுதும் கூட்டு சுவாதினத்தில் இருந்தது இல்லை என்றாலும் 43 வருடங்களாக திருப்பத்தூரில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது என் தாய் தந்தையினார் எனக்கு செய்ய வேண்டிய சீர் வரிசை செய்து விட்டார்கள் என்றால் எதுவும் இல்லை. திருமணத்தின் போது தேவையான சீர் செய்து விட்டதால் 30 ஆண்டுகளுக்கு பிறகு பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கவேண்டி பொய்யான எதிர் வாதம் வைத்து உள்ளேன் என்றால் சரியல்ல. 1989 முன்பே திருமணம் ஆகிவிட்டதால்

தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் நாளது தேதி வரையில் எனது தாயார் பெயரில் தான் உள்ளது, அதன் பின்னிட்டு எங்கள் பெயரில் உள்ளது. உள்ளதாக குறிப்பிடும் வருவாய் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்கவேண்டும் என்பதற்க்காக பொய் வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரியல்ல, அவ்வகையில் எனக்கு எவ்வித உரிமை இல்லை என்றால் சரியல்ல.

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai